https://puthusudar.lk/

puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

24th MARCH 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 72



## மொட்டு வேட்பாளர் ரணில்தான்

மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கதான் என்பது உறுதியாகியுள்ளது என்று ஜேவிபி உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மொட்டு கட்சி ரணிலைத்தான் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் என்பது உறுதியாகியுள்ளது.பசில் ராஜபக்ச ரணிலை நிறுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்.

ராஜபக்ச உள்ளிட்ட திருடர்களை பாதுகாப்பதற்காக ராஜபக்ச குடும்பத்தால் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டவர்தான் ரணில்.

அவர் அந்தப் பணியை சரியாக செய்து வருவதால் அவரையே மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள்.அவர்களின் கனவு இந்த ஜனாதிபதி தேர்தலுடன் முடிவுக்கு வரும் - என்றார்.





# கோத்தாவை விரட்டியது தமிழ் – முஸ்லிம் மக்கள் அல்ல

கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி பதவியில் விரட்டியது தமிழ் –முஸ்லிம் மக்கள்தான் என்று கோத்தாபய ராஜபக்ச அவரது “சதி“ என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதை ஏற்க முடியாது என்றும் அவர்கள்தான் விரட்டினார்கள் என்று நான் கருதவில்லை என்றும் பசில் ராஜபக்ச கூறியுள்ளார்.

– இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் :

ஜனாதிபதி வேட்பாளருக்குத் தகுதியானவர் ரணில் விக்ரமசிங்கதான்.பொருளாதார ரீதியில் வீழ்ச்சிப் பாதையில்

02 ▶

## மே மாதத்துக்கு பின் வாருங்கள்



ஜனாதிபதி தேர்தலையொட்டி அரசியல் கூட்டணி அமைப்பதாக இருந்தால் அதுபற்றிப் பேசுவதற்காக மே மாதத்துக்கு பின் என்னிடம் வாருங்கள் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்கட்சிகளிடம் கூறியுள்ளார்.

மே மாதத்திற்கு பின்பே தேர்தல் விடயங்கள் சூடு பிடிக்கும் என்றும் அப்போது கூட்டணி அமைப்பது தொடர்பில் செயலில் இறங்குவதே பொருத்தமாக இருக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.



## இரண்டு தேர்தலும் ஒரே நேரத்தில்

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் இரண்டையும் ஒரே நேரத்தில் நடத்துமாறு சாபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்தன அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ்வாறு இரண்டையும் ஒன்றாக நடத்துவதால் செலவை மீதப்படுத்த முடியும் என்று கூறிய சபாநாயகர் இரண்டு தேர்தல்களையும் தனித்தனியே நடத்தினால் அதிக பணம் செலவாகும் என்று தெரிவித்துள்ளார்.

நாடு இப்போது இருக்கின்ற நிலையில் இரண்டையும் ஒன்றாக நடத்துவதே சிறந்தது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.



புதுசுடர்
www.puthusudar.lk
2024 MARCH 24 - SUNDAY

# முதுகெலும்பற்ற மைத்திரி

பொதுவாக அரசியல் தலைவர்களின் பழக்கம் அதிகாரத்தில் இருக்கும்போது செய்ய வேண்டியதைச் செய்யமாட்டார்கள்.அதிகாரத்தில் இல்லாதபோது வந்து பில்டப் விடுவார்கள்.

அப்படித்தான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும். அதிகாரத்தில் இருக்கின்றபோது சும்மா இருந்துவிட்டு– செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருந்துவிட்டு இப்போது வந்து ஏதேதோ உளறுகிறார்.

இப்போது அவர் உளறிக்கொண்டிருப்பது ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர்கள் யாரென்று அவருக்குத் தெரியும் என்பதுதான்.

அவர் ஊடகங்களுக்கு வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

“ஈஸ்டர் தாக்குதல் நடத்தியவர்கள் யாரென்று எனக்கு நன்றாகவே தெரியும்.அதை நான் நீதிபதிகளிடம் சொல்வேன்.அவர்கள் ரகசியம் காக்க வேண்டும்“ என்று தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றது அவரது ஆட்சியில்தான்–அவர் ஜனாதிபதியாக இருக்கும்போதுதான். தாக்குதல் நடத்தியது யாரென்று தெரிந்திருந்தால் ஏன் அப்போதே அவர் அந்தக் குற்றவாளிகளைத் தண்டிக்கவில்லை?

அவரிடம் முழுமையான அதிகாரம் இருந்தது.அவர் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக இருந்தார்.அவர் உடனடியாக குற்றவாளிகளைத் தண்டித்திருந்தால் இந்த நாடு மட்டுமல்ல முழு உலகமும் மைத்திரியைப் போற்றியிருக்கும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நீதி கிடைத்திருக்கும்.

அதுமட்டுமல்ல அவர் அவரது ஆட்சியையும் காப்பாற்றி இருப்பார்.அவரது அரசு கவிழ்ந்தது இந்தத் தாக்குதலின் காரணமாகத்தானே.இந்தத் தாக்குதலைத் தடுப்பதற்கு அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கோபம் காரணமாகவும் மைத்திரியின் ஆட்சியில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற அச்சம் காரணமாகவுமே மக்கள் அந்த ஆட்சியைக் கவிழ்த்தனர்.

தடுக்கத்தான் முடியவவில்லை.ஆகக் குறைந்தது குற்றவாளிகளையாவது தண்டித்திருந்தால் மக்கள் அவரை நம்பி இருப்பார்கள்.பாதிக்கப்பட்ட மக்கள் அவரை மன்னித்திருப்பார்கள்.

ஆனால்,முதுகெலும்பற்ற ஜனாதிபதியாக இருந்துவிட்டு– உண்மையெல்லாம் அறிந்து வைத்திருந்தும் இப்போது வந்து அதுபற்றிக் கூறுவதில் என்ன பயன்.அதனால் அவருக்குத்தான் அவமானம்.அவரது இயலாமையை– விவேகமற்ற தன்மையைத்தான் இது காட்டுகிறது.

இந்த ஈஸ்டர் தாக்குதலால் அப்பாவி முஸ்லிம்கள் எப்படிப்பட்ட துன்பங்களை அனுபவித்தார்கள் –எப்படிப்பட்ட இனவாதத் தாக்குதலுக்கு உள்ளானார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

குருநாகல்,மினுவாங்கொட போன்ற பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக பேரினவாதிகள் கலவரங்களை ஏற்படுத்தினார்கள். கடைகள் –வீடுகளை எரித்தார்கள். மினுவாங்கொடவில் ஒரு முஸ்லிம் சகோதரர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

குருநாகலில் டொக்டர் ஷ ாபி ஷிஹாப்தீனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாத செயற்பாடு முழு நாட்டையும் உலுக்கியது.

முஸ்லிம்கள் அனைவரும் பயங்கரவாதிகள்போலும் அவர்கள் நாட்டை அழிக்க வந்தவர்கள்போலும் பார்க்கப்பட்டனர்ஊடகங்களால் காட்டப்பட்டனர்.

ஹிஸ்புல்லாஹ்வின் பல்கலைக்கழகம் இஸ்லாமிய பயங்கரவாதத்தை வளர்க்கும் இடமாகக் காட்டப்பட்டு அந்த இடம் அரசால் கைப்பற்றப்பட்டது.

ஆளுநர்கள் ஹிஸ்புல்லாஹ்,அசாத் சாலி ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று கூறி அத்துரலிய ரத்தின தேரர் தலதா மாளிகைக்கு முன்பாக உண்ணாவிரதமிருந்தார்.

அதன் விபரீதத்தை உணர்ந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ,ஆளுநர்கள் மாத்திரமல்ல அரசில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் விலக வேண்டும் என்றொரு தீர்மானத்தை எடுத்தார்.

அந்தத் தீர்மானத்தை மதித்து அனைவரும் பதவி விலகினர். அதனால் ஏற்படவிருந்த விபரீதம்–ஆபத்து தடுக்காப்பட்டது.

அதிலும் முக்கியமான விடயம் என்னவென்றால் அத்துரலிய மைத்திரியின் நெருக்கமானவராக இருந்தார்.அவர் உண்ணாவிரம் இருப்பதை மைத்திரியால் தடுக்க முடியவில்லை.

பல்வேறு இடங்களில் முஸ்லிம்கள் பெரும் அவஸ்தையை எதிர்கொண்டனர்.இனவாத ஒதுக்களை எதிர்கொண்டனர்.

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரியான ஸஹ்ரான் குழுவுடன் சம்பந்தப்படாதவர்களும் கைது செய்யப்பட்டனர்.அவரது பிரசாரத்தை செவிமடுத்தவர்கள்,அவரது பள்ளிவாசலுக்குச் சென்றவர்கள் என எல்லோரும் கைது செய்யப்பட்டனர்.

மைத்திரி நினைத்திருந்தால் நாட்டில் இத்தனை அநியாயங்களையும் தடுத்திருக்கலாம்.அவர் முஸ்லிம்களுக்கு எதிரான எந்தவொரு இனவாத செயற்பாட்டையும் தடுக்கவில்லை.

அப்போது முதுகெலும்பற்ற தலைவராக இருந்துவிட்டு இப்போது வந்து பில்டப் காட்டுவதில் என்ன பயன் இருக்கிறது ?






காத்தான்குடி ஜம்மியத்துல் உலமா, பள்ளிவாசல் சம்மேளனம், வர்த்தக சம்மேளனம் மற்றும் நகர சபையுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் தலைமையில் இப்தார் நிகழ்வு இடம்பெற்றது. சுமார் 5000 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணன் மற்றும் கௌரவ அதிதிகளாக முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ், முஷாரப், அலி சாஹிர் மௌலானா மற்றும் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் இப்தார் நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.




## கோதாவை..


(முன்பக்கத் தொடர்ச்சி...)

**சென்ற இந்த நாட்டை மீட்டெடுத்திருக்கிறார். எல்லா பிரச்சினைகளும் மெல்ல தீர்ந்துகொண்டு வருகின்றன.**

**முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. இதை நான் ஜனாதிபதியிடம் கூறி இருக்கிறேன்.**

**கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி பதவியில் விரட்டியது தமிழ் –முஸ்லிம் மக்கள்தான் என்று கோத்தாபய ராஜபக்ச அவரது ““ சதி ““ என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதை ஏற்க முடியாது என்றும் அவர்கள்தான் விரட்டினார்கள் என்று நான் கருதவில்லை.**





# ஆட்சி மாற்றத்தை நாடும் மக்கள்

இங்கையின் அரசியல் அரங்கில் இன்று அணைத்து அரசியல் கட்சிகளும் பிஸியாகிவிட்டன.அதற்குக் காரணம் இந்த வருடம் இடம்பெறவிருக்கின்ற ஜனாதிபதி தேர்தல்.

கட்சி தாவல்–கூட்டணி அமைத்தல்–ரகசிய சந்திப்பு என்று பரபரப்பாகிவிட்டன அரசியல் அரங்கு.

இந்தத் தேர்தலை அதிக ஆர்வத்துடன் எதிர்பார்த்திருப்பது எதிர்கட்சிகள்தான்.அவர்களுக்குத்தான் வாசி அதிகம்.இப்போதே தேர்தல் பிரச்சாரங்களுக்கு இணையான பொதுக் கூட்டங்கள் நாடு பூராகவும் சூடு கிளப்பத் தொடங்கிவிட்டன.

அரச தரப்பு மண் கவ்வும் நிலைதான்.இருந்தாலும்,ஆட்சியை விட்டுக் கொடுப்பதற்கு அவர்கள் தயாரில்லை.இதனால் எதையாவது செய்து ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றன மொட்டு கட்சியும் ஜனாதிபதி தரப்பும்.

அவர்கள் வெற்றிக்கான கருவியாக இப்போது சிந்திக்கத் தொடங்கியது நாடாளுமன்றத் தேர்தலைத்தான்.அதை முதலில் நடத்தி தோல்வியடைந்தாலும் ஏனைய கட்சிகளில் இருந்து எம்பிக்களை விலைக்கு வாங்கி நாடாளுமன்ற ஆட்சியை அமைத்துவிடலாம் என்று அரசு கருதுகிறது.

இந்த விடயம் இப்போது அரசுக்குள் தீவிரமாக சிந்திக்கப்படுகிறது. அதற்குக் காரணம் பசில் ராஜபக்சவின் வருகைதான்.

பசில் அமெரிக்காவில் சும்மா ஓய்வில் இருக்கவில்லை.அவர் அங்கிருந்துகொண்டு இலங்கையின் அரசியல் தளத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்தார்.

கிராமங்களில் உள்ள மொட்டு கட்சி நிர்வாகிகளின் ஊடாக களநிலவரத்தை அறிந்துகொண்டார்.மொட்டு கட்சிக்கு எந்தளவு செல்வாக்கு இருக்கிறது என்பதையும் அறிந்துகொண்டார்.

அந்தவகையில்,வெறும் 20 வீதம் அளவிலான செல்வாக்குதான் மொட்டுக்கு இருக்கிறது.இதை வைத்துக்கொண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெல்ல முடியாது.

அதைவிட,நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் மேலே குறிப்பிட்டதுபோல் தோல்வியடைந்தாலும் எம்பிக்களை வாங்கி நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்கலாம்.

நாடாளுமன்ற ஆட்சி கையில் இருப்பதால் ஜனாதிபதி தேர்தலுக்குச் சென்றால் இலகுவாக வென்றுவிடலாம் என்று பசில் கருதுகிறார்.

இதற்கான வேலைத் திட்டத்தைத் தொடக்கி வைப்பதற்காகவே பசில் அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்துள்ளார்.அவர் நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு ஆதரவாகப் பேசி வருவதைக் காணலாம்.



அவர்களின் கையாலேயே நாசமாக்கிய நாட்டை மீண்டும் மீண்டும் நாசமாக்குவதற்கான முயற்சிதான் இது.முதலில் வருவது நாடாளுமன்றத் தேர்தலோ, ஜனாதிபதி தேர்தலோ எந்தத் தேர்தலாக இருந்தாலும் இந்த அரசை விரட்டுவது என்பதில் மக்கள் உறுதியாகவே உள்ளார்கள்.

மீண்டும் ஒரு தடவை மக்கள் ஏமாறுவதற்குத் தயாரில்லை. வீழ்ந்த நாட்டைத் தூக்கி நிமிர்த்தாது அதன்மேல் ஏறி நின்றுதான் மக்களிடம் வாக்குக் கேட்டுச் சொல்லப் போகிறார்கள்.

இவர்களால் ஏற்படுத்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை இவர்கள் இன்னும் தீர்க்கவில்லை. ஆனால்,பிரச்சினை தீர்ந்துவிட்டதாக இவர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பொய்யெல்லாம் இனியும் எடுபடாது.மக்கள் இவர்களை விரட்டுவது என்ற தீர்மானத்தை கோத்தா விரட்டப்பட்ட சந்தர்ப்பத்திலேயே எடுத்துவிட்டார்கள்.

ஆட்சி மாற்றம் ஒன்று தேவை என்பதை மக்கள் கோத்தாவை விரட்டுவதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தபோதே உணர்ந்துவிட்டார்கள்.

ஆனால்,ஜனாதிபதி தேர்தலுக்குத் தயாராகுங்கள் என்று ஜனாதிபதி திங்கள் கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

நடக்கப்போவது எந்தத் தேர்தலாக இருந்தாலும் அதை எதிர்கொள்வதற்கு மக்கள் தயாராகவே உள்ளார்கள். அந்தத் தேர்தல் இந்த அரசுக்குப் பாடம் புகட்டும் தேர்தலாக இருக்கப்போவது நிச்சயம்.

# புனித ஹஜ்
# HAJJ 2024
## ஹஜ்ஜுக்கான புதிவுகள் ஆரம்பம்



IATA

**36** வருட ஹஜ் உம்றா அனுபவத்துடன் இம்முறை புனித ஹஜ்ஜிற்காக அல்ஹாஜ் சையாப் அன்வர் அவர்களின் கண்காணிப்பில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது

**சப்ரா ட்ரவல்ஸ் & டுவர்ஸ்.**

**அஸீஸியா செல்வதில்லை மக்காவில் தங்குவது**

ஹஜ் பெகேஜில் அடங்குபவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- மினாவில் B Category Tent, தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விசா மற்றும் விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சிறப்பான சேவை.

**நீங்கள் எதிர்பாராத நியாய கட்டணம், நிறைவான சேவை**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

**அல்ஹாஜ் சையாப் அன்வர்**
**0775046995 I 0777667152**
**அல்ஹாஜ் ஜாபிர் - 0767007391**

## Safra Travels & Tours (Pvt) Ltd

FLG - 4, Dias Place, Gnasinghapura, Colombo -12.
Tel: (0094) 0112 335699 I Fax: 0112335043
E- mail: safra_travels@yahoo.com





# HAJJ PILGRIMAGE 2024
## புனித ஹஜ்



47 ஆண்டுகால அனுபவமும், முத்த உலமாவும் ஹாஜிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஹஜ் உம்றாவுக்கு வழிகாட்டும் அல்ஹாஜ் மவ்லவி ஏ.எல்.எம்.கலீல் மதனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் ஹஜ்பயணிக்கும் வாய்ப்பு

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

As Sheikh M A M Masooth Ahmed (Hashimi) JP
077 9000 115
(Kattankudy)

As Sheikh M A Ibrahim (Gafoori)
077 42 39 389
(Colombo)

Al Haj Mishab JP
077 400 8485
(Negombo)

நியாய கட்டணம், நிறைவான சேவை, நேர்த்தியான வழிகாட்டல்

மேலதிக விபரங்களுக்கு:

**+94 777 909 377 I +94 777 918 978**

## BURAQUE TRAVELS (PVT) LTD

+94 11 267 8811
Info@buraque.lk
62,Dematagoda Road, Colombo -09 Sri Lanka

In Service Over 3 Decades

IATA



# ஹஜ்
# HAJJ 2024
## வாழ்நாளில் மறக்கமுடியாத பயணம்



Luxury Package
Short Package

**Our Services**

- Accommodation in Makkah ( 5 Star Hotel - Clock Tower)
  in Madinah ( 4 Star Hotel )
  in Mina Tent - B Category
- Sri Lankan Meals
- Luxury Ground Transport
- Visa with Insurance and Air Ticket
- Guidance By Ashsaik Suib Deeni

தரமான சேவையுடன் அஷ்ஷேக் சுஐப் தீனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் புனித ஹஜ்ஜை பூரண திருப்தியுடன் நிறைவேற்ற காலம் தாழ்த்தாமல் தொடர்புகொள்ளுங்கள்

For further details, contact:

**Alhaj Askar Aunn - 0777 03 15 23**
**Alhaj Aunn - 077 55 42 660**

## The Global Travels & Leisure Pvt Ltd

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்

No.653, Maradana (Next to Sampath Bank ) Colombo 10
Tel: 0117221876 I 0117221720 E-mail: askar@theglobal.lk



# புனித ஹஜ் 2024

இம்முறை புனித ஹஜ்ஜிற்காக ஹாஜிகளின் நலன் கருதி 3 பெகேஜ்களில் அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது.



**PAKAGE -A: 20,95,000/-**
முஅல்லிம் - B

**PAKAGE -B: 16,95,000/-**
முஅல்லிம் - C , Clock Tower

**SORT PAKAGE -B: 18,95,000/-**

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

**ரமழான் இறுதி 15 நாட்கள் உம்றா பெகேஜ்: 749,000/-**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:
அல்ஹாஜ் மௌலவி பைசல் பின்னூரி - **0777141151**
அல்ஹாஜ் மௌலவி ஸகரியா இனாமி - **0777151156**

# பின்னூரியா

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்

**BINNOORIYA HAJJ UMRAH SERVICE**

#204/01, Grandpass Road,Colombo-14. and Asna Super Market, Akurana.



## இன்னும் வாசிக்கவில்லையாம்

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச புத்தகம் வெளியிட்டு பல நாட்கள் கடந்துவிட்டன. அதுதான் அவர் எப்படி ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டப்பட்டார் என்பதுபற்றிய புத்தகம்.

அந்த அந்தப் புத்தகம் உடனே விற்றுத் தீர்ந்தது மாத்திரமல்ல பலர் வாசித்தும் முடித்துவிட்டார்கள்.

ஆனால், அவரது சகோதரர் பசில் ராஜபக்ச இன்னும் வாசிக்கவில்லையாம்.

கேட்டால் நேரமில்லை, அதற்கான தேவை வரவில்லை என்றெல்லாம் கூறுகிறார்.

கோத்தா பார்த்த வேலையால் இன்னும் அவர்மீது பசிலுக்கு கோபம் உள்ளது என்பது இதன்மூலம் தெரிகிறது.



## ரகசிய பேச்சு





பசில் ராஜபக்ச அமெரிக்காவில் இருந்து வந்த அன்றைய தினம் அவருக்கு விமான நிலையத்தில் அவருக்கு மொட்டு எம்பிக்களால் பாரிய வரவேற்பு வழங்கப்பட்டது.

பல எம்பிக்கள் அவரைச் சூழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

ரோஹித அபயகுணவர்தன,டி.வி.சானக மற்றும் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் ஓர் அறையில் பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது ரோஹித மற்றும் சாணக அந்தப் பக்கம் நழுவ திடீரென பசில் குறுகிய நேரத்துக்குள் பிரசன்னவுடன் ஏதோ குசு குசு என்று பேசினாராம்.



## கோத்தாவின் புத்தகத்தை கடைக்குச் சென்று வாங்கிய நாமல்

கோத்தாபய ராஜபக்சவின் புத்தகம் வெளியிடப்பட்ட அன்று அதை வாங்குவதற்காக நாமல் ராஜபக்ச நுகேகொடயில் உள்ள புத்தக கடை ஒன்றுக்குச் சென்றார்.

அந்தப் புத்தகத்தை வாங்குவதற்காக பலர் அங்கு கூடி நின்றனர்.அவர்கள் நாமலைக் கண்டதும் அவருடன் உரையாடலில் ஈடுபட்டனர்.

உங்கள் சித்தப்பாவிடம் நேராக புத்தகத்தைக் கேட்டு வாங்காமல் ஏன் கடையில் வாங்குகிறீர்கள் என்று அவர்கள் நாமலிடம் கேட்டனர்.

இல்லை இல்லை ..கடையில் வாங்குவதுதான் நல்லது என்று நினைத்தேன் என்று பதிலளித்தார்.



## சந்தர்ப்பம் பார்த்து அடி

சுறுசுறுப்பாக ஓடித் திரிந்த அந்த இளம் அமைச்சர் சில நாட்களாக ஒடிங்கிப் போய் இருக்கிறார்.

வெளிநாடு ஒன்றில் அவர் தெரிவித்த கருத்துத் தொடர்பில் பல அரசியல்வாதிகள் அவரைக் கடுமையாகத் தாக்கினர்.

அந்தத் தாக்குதலுக்குப் பின்னணியில் இருந்தது அவர் சார்ந்த அரச முக்கியஸ்தர்கள் என்பதுதான் இங்கு முக்கியம்.

அதைத் தேடிப் பார்த்து கண்டுபிடித்துள்ளதால் சந்தர்ப்பம் பார்த்து அவர்களைத் தாக்குவதற்கு அவர் காத்திருக்கிறாராம்.



## மொட்டுக்குள் எதிர்ப்பு

ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்று மொட்டு கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ச கூறுகின்றபோதிலும் அந்த கட்சிக்குள் அதிகமானவர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் உடன்பாடில்லை என்று அறிய முடிகிறதது..

அதற்குக் காரணம் அடுத்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சியைச் சேர்ந்த பலர் தோல்வியடையப் போவது நிச்சயம்.

அப்படி தோல்வியடைந்தால் பலரது பென்ஷன் கூட இல்லாமல்போகும். அவர்களது பென்ஷனையாவது காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றால் நாடாளுமன்ற ஆயுட் காலம் முடிவடைந்த பின்பே நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இதனால்,அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாது ஜனாதிபதி தேர்தலையே முதலில் நடத்துமாறு ஜனாதிபதிக்குத் தூது அனுப்பி வருகிறார்களாம்.



## நாங்க சொல்றத கேளுங்க

நாமல் ராஜபக்சவும் ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவரும் சில நாட்களுக்கு முன் அந்த பிரமுகரின் கொழும்பு  இல்லத்தில் சந்தித்தனர்.

அப்போது நாமல் ஜனாதிபதி தேர்தல் நடத்துவதற்கு அவரது விருப்பமின்மையைத் தெரிவித்தார்.

“நாங்க உதவி செஞ்சாலும் ரணிலால ஜனாதிபதி தேர்தலில் வெல்ல ஏலாது. பார்ளிமென்ட் இலக்சனுக்கு போனா வெல்ல ஏலாட்டியும் பைட் ஒண்டு குடுக்கலாம்.சஜித் தரப்பு ஆட்கள வளச்சுப் போட்டு ஆட்சியைப் பிடிக்கலாம்“..என்று நாமல் அந்த பிரமுகரிடம் கூறினார்.

இதுபற்றி ஜனாதிபதியிடம் பேசுவதாக அவர் நாமலிடம் கூறினார்.

## அவருக்கும் அதே ஆசை



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பிரதான கட்சிகளில் இருந்து ஒதுக்கப்பட்ட பலர் கூட்டணி அமைத்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருப்பதை அவதானிக்க முடிகிறது.

அந்த வகையில் அமைச்சுப் பதவியில் இருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்ட ரொஷான் ரணசிங்க கட்சி ஒன்றுக்குத் தலைவராகியுள்ளார்.அவரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சுதந்திர கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட தயாசிறி ஜயசேகரவும் கூட்டமைப்பு ஒன்றை அமைத்துள்ளார்.

அவரது நோக்கமும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதுதானாம்.அதுமட்டுமல்ல,தான் வேட்பாளராக இறங்கினால் வெல்வேன் என்று சொல்லி திரிகிறார்.




சின்னத்தம்பி குருபரன்

# மர்மங்கள் நிறைந்த விலையேற்றம்

போகிற போக்கைப் பார்த்தால் மத்திய, பாமர மக்கள் மிகமோசமான நிற்கதி நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்களோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் தோன்ற ஆரம்பித்துவிட்டது..

அரசியல்வாதிகள் தேர்தல்களுக்கான வியூகம் வகுப்பதிலும் மேடைகளில் அறிக்கை விட்டு முழங்குவதிலும் தீவிர கவனமெடுத்து வருகின்றனர்.

பொருட்களின் விலையினை 300 வீதம்வரை அதிகரித்து மக்களின் கொள்வனவுச் சக்திக்கு ஆப்படித்து, கொள்வனவுச் சக்தியைக் குறைத்து நீண்ட வரிசையைக் குறைத்ததோடு மாத்திரமின்றி பொருட்களின் நிரம்பலையும் வலிந்து ஒரு எல்லைக்குள் கொண்டுவந்தனர்.


இப்போது முன்புபோல் நினைத்த பொருளைக் கொள்வனவு செய்வதற்கு மக்களிடம் பணம் இல்லாத நிலைக்கு மக்களைக் கொண்டுவந்து விட்டிருக்கின்றனர்.

மக்களின் வருமானம் அதிகரிக்கப்படாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட விலை, கட்டண ஏற்றங்கள், வரி அதிகரிப்புக்கள் யாவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிக மோசமாகப் பாதித்திருக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இன்னொரு வர்க்கம் இலாபத்துக்கு மேல் இலாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறது.

இன்னொரு வர்க்கம் எங்களால்தான் வரிசை யுகம் இல்லாமலாக்கப்பட்டிருக்கிறது. பொருள் தட்டுப்பாடு இல்லாமலாக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரம் வளர்ச்சி






கண்டுகொண்டிருக்கிறது. டொலர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கிறோம். வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்திருக்கிறது என்று பாராளுமன்றத்திலும் பொது வெளிகளிலும் முழங்கிக் கொண்டிருக்கிறது.

ஊழல் மோசடி காரணமாகத் திட்டமிட்டுச் சிதைக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடையவில்லை. ஒரு மில்லியனுக்கு மேற்பட்டோர் தொழில் வாய்ப்பை இழந்திருக்கின்றனர்.

தொழிலின்மை, வாழ்க்கைத்தர அதிகரிப்பு, வரி அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக ஐந்து வீதத்துக்கு மேற்பட்டோர் நாட்டைவிட்டு வெளியேறி இருக்கின்றனர்.

இவை எல்லாம் தெரிந்தும் தெரியாததுபோல் பல அரசியல்வாதிகள் மேடைகளில் முழங்கிக் கொண்டிருக்கின்றனர். அப்பாவி மக்கள் இவர்களால் தொடந்து ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகளில் பெரும் பெரும்பாலானோர் ‘கழுவுற மீனில் நழுவுற மீன்போல்’ அரச சலுகைகள், வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெறும் வாக்கெடுப்புக்களில் கலந்துகொள்ளாமல் பின்கதவால் விலகிச் சென்று உப்புச் சப்பற்ற காரணங்களை முன்வைத்து அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

பாராளுமன்ற அங்கத்தவர்கள் பாராளுமன்ற அமர்வுகளில் சமூகமளித்து வாக்கெடுப்பு நாட்களில் வாக்கெடுப்பில் கலந்துகொண்டால் மாத்திரமே அன்றைய தினத்துக்கான கொடுப்பனவு வழங்கப்படும் என்ற கட்டாய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

இத்தகைய அரசியல்வாதிகளுக்கு எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும். அத்தோடு அறுபது, அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்டோர் தேரதலில் போட்டியிடுவதைத் தடுப்பதற்கான சட்டமும் இயற்றப்படல் வேண்டும்.

ஓர் உறுப்பினர் இரண்டு தடவைகளுக்கு மேல் தெரிவு செய்யப்படாமல் இருப்பதற்கும் சட்டங்கள் கொண்டு வரப்படல் வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் மக்களின் கைகளில் திறன்பேசிகளும் (Smart Android Phone), சமூக வலைத்தளங்களும் அதிகரித்திருக்கும் நிலையில் முன்புபோல் மக்களை ஏமாற்றலாம் என்று ‘கண்ணை மூடிவிட்டால் உலகம் இருண்டுவிட்டது’ என பூனை கருதவதுபோல் கருதிக்கொண்டு அறிக்கைக்கு மேல் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இன்னும் ஒரு சிலர் ஒற்றர்கள்போல் நடமாடிக் கொண்டிருக்கின்றனர். இதனை நம்புவதற்கு இனிமேலும் மக்கள் தயாராக இலலை.

நாட்டைக் கொள்ளையடித்தவர்களின் பணம் அனைத்தும் பாதுகாப்பாகப் பெட்டகங்களில் மறைத்து வைக்கப்பட்டிருக்க மேலும் மேலும் ஊழல் மோசடிகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.



நாட்டைக் கொண்டு நடாத்துவதற்கு மக்கள் வரிப்பணம் செலுத்திக்கொண்டிருக்கின்றனர். இதனால் மக்கள் மே லும் மேலும் ஏழைகளாகிக்கொண்டிருக்கின்றனர்.

தற்போதைய நிலவரத்தின்படி ஒரு கோடிக்கு மேற்பட்டோர் வறுமைக் கோட்டின் கீழ் சென்றுள்ளனர் என யுளயை டுநயசெ அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. இந்த நிலமை மேலும் நீடித்துக்கொண்டு போனால் நாடு அடுத்த சோமாலியாபோல் ஆகுவதற்கு வெகு காலமெடுக்காது.

அண்மைக் காலமாக மின்சார சபை, எரிவாயு நிறுவனங்கள், தேசிய நீர்வழங்கல் அதிகாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் யாவும் இலாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதைத் துறை சார்ந்தவர்களே கூறுகின்றனர்.

இவற்றுக்கு எத்தகைய விலை அதிகரிப்பு ஏற்படுத்தினாலும் ஒரு சிறிய வீதம் ஒன்றைத் தவிர நாளாந்த நுகர்வில் வீழ்ச்சி ஏற்படாது என்பது துறை சார்ந்தவர்களுக்கு நன்கு தெரியும் என்பதனால் மலைபோல் விலை, கட்டணங்களை அதிகரித்துக். கடுகுபோல் விலையைக் குறைப்பதற்கு நீண்ட நாட்களாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதில் பித்தலாட்டங்களும் பல மர்மங்களும் அடங்கி இருக்கின்றன. அதேபோல் ஏனைய பொருட்களுக்கும் 300 வீதம்வரை விலை அதிகரிப்பை ஏற்படுத்திவிட்டு சிறிய ஒரு வீதத்தினால் குறைக்கின்றனர்.

இதற்கும் உற்பத்தியாளர் களையும், வியாபாரிகளையும் பாதுகாப்பதற்காகப் பல பில்டப்புகளைச் செய்து விலையைக் குறைக்கின்றனர்.

பொருட்களின் விலையேறப் போகின்றதென்றால் மூன்று நான்கு நாட்களுக்கு முன்னர் சமூக வலைத்தளங்களில் செய்தி வெளியாகின்றது.

அதைப் பார்த்த வியாபாரிகள் விலை அதிகரிக்கப் போகின்றதே எனப் பொருட்களைப் பதுக்க ஆரம்பித்து விடுகின்றனர். விலை அதிகரித்த பின்னர் கூடிய விலையில் பொருட்களை விற்று அதிக இலாபம் சம்பாதிக்கின்றனர்.

அதேபோல் விலைக் குறைப்புத் தொடர்பான செய்தி வெளிவரும்போது புதிதாகப் பொருட்களைக் கொள்வனவு செய்யாமல் இருக்கின்ற பொருட்களை மாத்திரம் விற்பனை செய்த பின்னர் கையிருப்பு முடிந்துவிட்டது எனக் கூறி நுகர்வோரைத் திருப்பி அனுப்பி விடுகின்றனர்.

ஒரு சில வியாபாரிகள் இவற்றுக்கு விதி விலக்காகவும் உள்ளனர்.இத்தகைய செய்திகள் உரிய அதிகாரிகளுக்குத் தெரிந்தா அல்லது தெரியாமலா அல்லது அவர்களின் அனுமதியுடனா வெளியாகின்றன என்பது மர்மமாகவே உள்ளது.

**பொருட்களின் விலையேறப் போகின்றதென்றால் மூன்று நான்கு நாட்களுக்கு முன்னர் சமூக வலைத்தளங்களில் செய்தி வெளியாகின்றது. அதைப் பார்த்த வியாபாரிகள் பொருட்களைப் பதுக்க ஆரம்பித்து விடுகின்றனர்.விலை அதிகரித்த பின்னர் கூடிய விலையில் பொருட்களை விற்று அதிக இலாபம் சம்பாதிக்கின்றனர். அதேபோல் விலைக் குறைப்புத் தொடர்பான செய்தி வெளிவரும்போது புதிதாகப் பொருட்களைக் கொள்வனவு செய்யாமல் இருக்கிற பொருட்களை மாத்திரம் விற்பனை செய்த பின்னர் கையிருப்பு முடிந்துவிட்டது எனக் கூறி நுகர்வோரைத் திருப்பி அனுப்பி விடுகின்றனர்.**

-தொடரும்-

# 'Wowrudu Wasi' புத்தாண்டு விற்பனை அறிமுகம்




Samsung Sri Lanka ஆனது இவ்வாண்டிற்கான பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட புத்தாண்டு விளம்பரம் தொடர்பாக 'Samsung Wowrudu Wasi' ஆனது மார்ச் 4 தொடக்கம் ஏப்ரல் 30 வரை, அனைத்து வாடிக்கையாளர்களும், சமீபத்திய தொழில்நுட்பத் தயாரிப்புகளினை ஒப்பிட முடியா விலையில் அனுபவிக்க வாய்ப்பினை வழங்குகின்றது.

Samsung பாவனையாளர்கள் Samsung இன் பல்வேறு வகையான சாதனங்களினை 35மூ வரையிலான விலைக் கழிவுடன் அனுபவிக்க முடியும்.

நீங்கள் ஒரு புதிய தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதன பெட்டி, சலவை இயந்திரம் அல்லது நுண்கதிர் அலை வெப்ப அடுப்பு என்பனவற்றினை கொள்வனவு செய்ய 'Samsung Wowrudu Wasi' ஆனது உங்களுக்கு வாய்ப்பினை வழங்குகின்றது.

இது தொழில்நுட்ப ஆர்வலர்கள் மற்றும் குடும்பங்களுக்கு தமது வீட்டு உபகரணங்களினை மேம்படுத்துவதற்கும் முன்னெப்போதும் இல்லாத வகையினில் புதுமைகளினை அனுபவிப்பதற்கு இதுவே சரியான தருணமாகும்.

Samsung Sri Lanka வின் முகாமைத்துவப் பணிப்பாளராகிய SangHwa Song அவர்கள் தனது மகிழ்ச்சியினை வெளிப்படுத்துகையில் கூறியதாவது 'Samsung Wowrudu Wasi' புத்தாண்டு விளம்பரமானது பாரம்பரியத்தினையும் அதிநவீன தொழில்நுட்பத்தினையும் ஒன்றிணைக்கின்றது.

அதிசிறந்த தயாரிப்புகள் மற்றும் சேவைகளினை வழங்குவதற்கான எமது உறுதிப்பாட்டினை இது வலியுறுத்துன்கிறது. வாடிக்கையாளர்கள் யாவரும் Samsung இன் சிறந்த இணையற்ற விலையில் இத்தயாரிப்புகளினை அனுபவிக்க முடியும். எனக் கூறினார்.

# Suzuki WagonR வாகனங்களின் பாதுகாப்பு அம்சம் தொடர்பான மீளப்பெறல் அறிவிப்பு




ஜப்பானின் Suzuki Motor Corporation நிறுவனம், ஜப்பானிய Suzuki WagonR வகை வாகனங்களின் எரிபொருள் தொகுதி தொடர்பான பாது காப்பு அம்சத்திற்காக மீளப்பெறுதலை அறிவித்துள்ளது.

இலங்கையில் ஞரணரமை வாகனங்களின் ஒரே விநியோகஸ்தர் எனும் வகையில், Associated Motorways (Private) Limited (AMW) Suzuki WagonR உரிமையாளர்களின் பாதுகாப் பையும் திருப்தியையும் உறுதி செய்ய இதற்கான தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.பாதுகாப்பு அம்ச மீளப்பெறல் நடவடிக்கையானது, எரிபொருள் தொகுதியில் உள்ள எரிபொருள் தூய்மையின்மை அடைப்புகளை சீர் செய்வதற்கான ஒரு நடவடிக்கையாகும்.

இது கவனிக்கப்படாமல் விடப்பட்டால், போதிய எரிபொருளின்மை தொடர்பான உரிய எச்சரிக்கை அறிவிப்புகள் வெளிப்படுத் தப்படாத நிலை ஏற்படுவதால், எஞ்சின் ஸ்தம்பிதமடைய வழிவகுக்கும். இது தொடர்பில் பாதிப்பைக் கொண்ட வகைகளில; Suzuki WagonR Premium> Suzuki WagonR FX/ FZ> Suzuki Spacia> Suzuki Stingray உள்ளிட்டவை அடங்குகின்றன.

இலங்கையில் சுமார் 32,500 Suzuki WagonR வாகனங்கள் இந்த பாதுகாப்பு அம்ச மீளப் பெறுகை வகையில் உள்ளடங்குகின்றன. அவற்றில் சுமார் 3,800 வாகனங்கள் ஏற்கனவே மீளப் பெறலுக்காக பெறப்பட்டு சீர் செய்யும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

# SLT-MOBITEL –இலங்கை ரயில்வே இணைந்து E-Ticket மற்றும் E-Warrant தீர்வுகள் அறிமுகம்




SLT-MOBITEL, இலங்கை புகையிரத திணைக்களத்துடன் இணைந்து, E-Ticket மற்றும் E-Warrant தீர்வுகள் அறிமுகம் செய்துள்ளன.

இந்தத் தீர்வுகளினூடாக, வாடிக்கையாளர்கள், சுற்றுலாப்பயணிகள் மற்றும் பொதுவான பயணிகள் சௌகரியமான முறையில் தமது புகையிரத டிக்கட்டை புதிய மேம்படுத்தப்பட்ட E-Ticketing தீர்வினூடாக பதிவு செய்து கொள்ள முடியும்.

மேலும் அரச ஊழியர்களுக்கும் பிரத்தியேகமான E-Warrant தீர்வினூடாக விசேட சௌகரியமான சேவையை அனுபவிக்க முடியும்.

2009 ஆம் ஆண்டு முதல் இலங்கை புகையிரத திணைக்களத்துடன் SLT-MOBITEL தொடர்புகளை பேணி வருகின்றது. போக்குவரத்துத் துறையில் பல்வேறு பிரிவுகளில் டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப் பணிப்பை நிறுவனம் மேற்கொண்டிருந்தது.

# விவசாயத்தை மேம்படுத்த சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனத்தின் உறுதிமொழி



சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனம் (ளுயசஎழனயலய னுநஎநடழிஅநவெ குiயெஉந – ளுனுகு) என்பது, ஒரு நிதி நிறுவனம் என்பதற்கும் அப்பாற்பட்டது. இது இலங்கையில் விவசாயத் துறையில் மாற்றத்தின் உந்துசக்தியாகத் திகழ்கின்றது.

தேசத்தின் விவசாயிகள் சமூகத்திற்கான நிலையான அர்ப்பணிப்புடன், ஆதரவு, நிலைபேண்தகமை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் அனைத்து எதிர்பார்ப்புக்களையும் மிஞ்சும் வகையில் விவசாயத் துறையை மேம்படுத்துகின்ற, மாற்றத்தை நோக்கிய பயணத்தில், ளுனுகு காலடியெடுத்து வைத்துள்ளது.

மிகவும் போற்றத்தக்க ஒரு சாதனையாக, ளுனுகு இன் விவசாயத் துறை நிதியானது ரூபா 4 பில்லியன் தொகையைக் கடந்துள்ளதுடன், நாடெங்கிலும் விவசாயிகள் இந்த நிறுவனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை இது எடுத்துக்காட்டுகின்றது.

விவசாய உபரணங்களுக்காக வழங்கப்பட்ட உத்தரவாதத்தில் அரைவாசிக்கும் மேற்பட்டவை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பதாகவே தீர்க்கப்பட்டுள்ளமை, ளுனுகு மற்றும் விவசாய சமூகம் ஆகியவற்றுக்கிடையிலான வலுவான பிணைப்பைக் காண்பிக்கின்றது.

னுைளநட ரூ ஆழவழச நுபெiநெநசiபெ்டீடஉ (னுஐஆழு), உயலடநலள யுபசழஉநரடவரசந உழடனைபெள டுiஅவைநன, மற்றும் டீசழறெ ரூ ஊழஅியலெ்டீடஉ போன்ற முன்னணி வகிக்கும் தொழில்துறை நிறுவனங்களுடன் மூலோபாய கூட்டாண்மைகளை ஏற்படுத்தி, அம்பாறை, பொலன்னறுவை அனுராதபுரம் மற்றும் குருணாகல் மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுடன் ளுனுகு தொடர்பினை ஏற்படுத்தியுள்ளது

# மக்கள் வங்கியின் YouTube சீட்டிழுப்பின் வெற்றியாளருக்கு Apple iPhone 15 பரிசு




மக்கள் வங்கியின் லுழரவுரடிந அலைவரிசைக்கு சந்தாதாரராக மாறி, புத்தம்புதிய Apple iPhone 15 தொலைபேசியை சொந்தமாக்கும் அதிர்ஷ்டசாலியை தெரிவு செய்வதற்கான குலுக்கல் சீட்டிழுப்பு, அதன் பிரதிப் பொது முகாமையாளர் (வங்கி உதவி சேவைகள்) திருமதி நிபுனிகா விஜயரத்ன தலைமையில் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

தும்மலசூரிய பிரதேசத்தை சேர்ந்த சந்துனி வத்சலா அவர்கள் இதில் வெற்றியீட்டியதுடன், அவருக்கான Apple iPhone 15 தொலைபேசியை மக்கள் வங்கியின் சந்தைப்படுத்தல் துறை தலைமை அதிகாரி திரு. நாலக விஜயவர்தன அவர்கள் அதனை வழங்கினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சந்துனி வத்சலா அவர்கள், "மக்கள் வங்கியின் Facebook பக்கத்தையும் நான் Follow செய்கின்றேன். இந்த நிலையில், ஒரு நாள் YouTube அலைவரிசைக்கு Subscribe செய்து Screenshot இனை Upload செய்யும் வெற்றியாளருக்கு Apple iPhone 15 கிடைக்கும் என்று ஒரு இடுகையைப் பார்த்தேன். அதனால்தான் YouTube அலைவரிசைக்கு Subscribe செய்தேன்,“ என்று குறிப்பிட்டார்.

# HER MARCH உடன் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் ஹேமாஸ் மருத்துவமனை

இலங்கையின் முன்னணி மருத்துவமனைகளான ஹேமாஸ் மருத்துவமனை சர்வதேச மகளிர் தினத்தையொட்டி "HER MARCH" என்ற ஒரு புதுமையான திட்டத்தை வெளியிட்டுள்ளது.

இது பெண்களின் ஆரோக்கியம்,நோய்த் தடுப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கிய பங்கு பற்றிய விவாதங்கள் மற்றும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கான ஒரு சிறந்த ஏற்பாடாகும்.




இலங்கை முழுவதும் உள்ள பெண்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் ஹேமாஸ் மருத்துவமனை பெண்களுக்காக பிரத்தியேகமாகத் தொகுக்கப்பட்ட தொகுப்புகளின் வரிசையை அறிமுகப்படுத்துகிறது.

இந்த விரிவான சுகாதார மதிப்பீடுகள் கவர்ச்சிகரமான விலையில் வழங்கப்படுகின்றன. மேலும் அவை பல்வேறு வங்கிகள் மற்றும் டிஜிட்டல் சுகாதார பராமரிப்பு தளம் மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கிடைக்கின்றன.

–அதன்படி, ஹேமாஸ் மருத்துவமனையில் பிரத்தியேகமாகக் கிடைக்கும், மார்பக புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதில் முக்கிய பங்கு வகிக்கும் பரிசோதனையை கவர்ச்சிகரமான விலையில் செய்வதன் மூலம் பெண்கள் சிறப்பான சேமிப்பைப் பெற முடியு

# புதிய இணையத்தளம் அறிமுகம்



கொழும்பு – படகு மற்றும் கடற்றொழில் சாதனங்களை உற்பத்தி செய்வதில் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவில் இயங்கும் Cey-Nor Foundation லிமிடெட், தனது மெருகேற்றம் செய்யப்பட்ட இணையத்தளத்தை அறிமுகம் செய்துள்ளது.

சர்வதேச சென்றடைவு மற்றும் மேம்படுத தப்பட்ட டிஜிட்டல் ஈடுபாடு ஆகியவற்றை உறுதி செய்வதற்கான மூலோபாய நகர்வை இதனூடாக வெளிப்படுத்தியுள்ளது.

Cey-Nor Foundation லிமிடெட் தவிசாளர் கலாநிதி. துலான் ஹெட்டியாரச்சி குறிப்பிடுகையில், சர்வதேச சந்தைகளில் நிலவும் மீன் பொருட்களுக்கான கேள்வியை இலங்கை பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை நிலவுகின்றது.

குறிப்பாக, ஐரோப்பா மற்றும் ஜப்பானிய சந்தைகளில் இந்த வாய்ப்புகள் காணப்படுகின்றன. "இரு நூற்றாண்டு காலமாக, நாம் தேயிலை மற்றும் இறப்பர் போன்ற பாரம்பரிய பொருட்களை ஏற்றுமதி செய்கின்றோம். அதுபோன்று,

இந்த சந்தைகளுக்கு மீன் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. Cey-Nor அதன் படகு கட்டும் ஆற்றலுடன், ஃ பைபர் படகு தயாரிப்பை மேம்படுத்தி, நிலைபேறாண்மைக்காக சூரிய வலுவை பயன்படுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள முன்வந்துள்ளது. " என்றார்.

# UNILEVER மற்றும் IDB இணைவு



யூனிலீவர் ஸ்ரீ லங்கா மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB) ஆகியன, இலங்கையில் சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களை (SMEs) மேம்படுத்துவதற்கான மூன்று வருட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இது யூனிலீவர் மற்றும் IDB ஆகியவற்றுக்கு இடையேயான அரச – தனியார் பங்காளித்துவம் என்பதோடு, இலங்கையில் ஒவ்வொரு வருடமும் நுண், சிறிய, நடுத்தர அளவிலான 20 தொழில்முனைவோரின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக, கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDF) மூலம் கூட்டாக ஆதரவளிக்கப்படும் திட்டமாகும்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (IDF) மேற்பார்வையின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கு இணங்க, குறைந்த வட்டியில், திருப்பிச் செலுத்தக்கூடிய கடன்கள் வடிவில், நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு (ஆளுஆநுள) நிதி மூலதனத்தை இது வழங்குகிறது.

இது அவர்களின் தொடக்கத்திற்கு அல்லது ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக கைத்தொழில் அமைச்சினால் முன்னுரிமை அளிக்கப்பட்ட துறைகளில் உள்ளூர் உற்பத்தியை விரிவுபடுத்த மிகப் பெரும் உதவியாக அமைகிறது.

சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்ததாக, முதல் தொகுதி கடன்கள் 10 பெண் சிறு தொழில்முனைவோருக்கு, கடந்த 2024 மார்ச் 12 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டன.

# அமானாவின் வீட்டு நிதி தீர்வு



அமானா வங்கியினால், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் விசேடமான வீட்டு நிதி வசதியை, முன்கூட்டியே செலுத்தித் தீர்க்கும்போது எவ்விதமான மேலதிக கட்டணங்களும் அறவிடப்படாத சலுகையுடன், மேலும் பல சலுகை வசதிகளையும் வழங்குவதாக வங்கி அறிவித்துள்ளது.

எளிமையான மற்றும் மக்களுக்கு நட்பான அனுபவத்தை உறுதி செய்யும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய சேவைகளை வழங்குவதில் தன்னை ஈடுபடுத்தியுள்ள அமானா வங்கியின் வீட்டு நிதி வசதியளிப்பினூடாக பரந்தளவு தேவைகளுக்காக நிதிவசதி வழங்கப்படுகின்றது.

காணி கொள்வனவு, வீடு நிர்மாணம், பழுதுபார்ப்புகள் அல்லது விஸ்தரிப்புகளை மேற்கொள்வது, ஏற்கனவே காணப்படும் வீட்டுக் கடன் வசதியை அமானா வங்கிக்கு மாற்றுவது அல்லது கட்டிடமொன்றை அல்லது வீடொன்றை கொள்வனவு செய்த போது ஏற்பட்ட செலவை ஈடுசெய்வது போன்ற செயற்பாடுகளுக்காக இந்த வசதி வழங்கப்படுகின்றது.

பரிபூரண வீட்டு நிதியளிப்பு வசதி தொடர்பில் அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர் கருத்துத் தெரிவிக்கையில், "எமது வீட்டு நிதி வசதியளிப்பு என்பது நிதி உதவியை வழங்குவதற்கு அப்பாலானது.

உங்களின் இல்ல உரிமையாளராகும் எதிர்பார்பை நனவாக்குவதற்கு வழிகோலுவதாக அமைந்துள்ளது. மக்களுக்கு நட்பான எமது தீர்வானது, நிதிசார் நெகிழ்ச்சித்தன்மையினூடாக எம் வாடிக்கையாளர்களுக்கு வலுவூட்டும் வகையிலும், தனிநபர்கள் மற்றும் குடும்பத்தாருக்கு வீட்டு உரிமையாண்மையை கொண்டிருக்கும் பயணத்தை எவ்விதமான அச்சமுமின்றி மேற்கொள்ளவும், முன்கூட்டியே செலுத்தி தீர்க்கும் போது மறைமுகக் கட்டணங்கள் எதுவுமில்லாத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது." என்றார்.

# The Residence நிர்மாணப் பணிகள் ஆரம்பம்




சொகுசு வீடமைபபு மறறும வாழககை முறைகளை மேம்படுத்தலில் புதிய யுகத்தை ஆரம்பிக்கும் வகையில், ரியல் எஸ்டேட் துறையின் முன்னோடியாக அமைந்துள்ள Prime Lands (Pvt) Ltd. தலவத்துகொட, சமகி மாவத்தையில், தனது புதிய வீடமைப்புத் திட்டமான 'வுாந சுநளனைநஉந" இன் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த புதிய வீடமைப்புத் தொகுதியின் நிரமாணப பணிகளின ஆரமபததைக குறிக்கும் அடிக்கல் நாட்டு வைபவத்தில், நிறுவனத்தின் தவிசாளர், இணை தலைமை அதிகாரி, வீட்டு உரிமையாளர்கள் மற்றும் Prime அணியினர் என பலரும் கலந்து கொண்டனர்.

Prime Lands (Pvt) Ltd இன் இணை தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "எமது வாடிக்கையாளர்கள், எமது பங்காளர்களாக திகழ்கின்றனர். எமது பயணத்தில் மறறுமொரு மைலகலலாக இனறைய நாள அமைந்துள்ளது.

Prime Group சார்பாக எமது சகல பங்காளர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். சந்தையில் அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னதாகவே, முறையான வடிவமைப்பைக் கூட பார்வையிடாமல், எமது புதிய திட்டத்தில் வீடொன்றை கொள்வனவு செய்வதற்கு உங்களில் பலர் தீர்மானித்துள்ளீர்கள். என்றார்.

13-புகழ்பெற்ற இந்தியத் திரைப்பட இசையமைப்பாளரும் பாடகர்-பாடலாசிரியருமான யுவன் ஷங்கர் ராஜா, பிப்ரவரி 24 அன்று CR & FC மைதானத்தில் Coca-Colaவின் அனுசரணையுடன் 'U1's Long Drive to Colombo' என்ற தனது இசை நிகழ்ச்சியின் மூலம் பார்வையாளர்களை கவர வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு 25,000க்கும் மேற்பட்ட ரசிகர்கள் கலந்து கொண்டனர்.

# Suwa Diviyaவின் சுகாதார மன்றம்




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களின் ஆரோக்கியம் மற்றும் அதிகாரமளித்தலைக் கொண்டாடும் நிகழ்நிலை சுகாதார மன்றமான "அவள் செழித்து வளர்கிறாள்" (She Thrives) என்ற இணையதளத்தை Suwa Diviya ஆனது அறிமுகப்படுத்துகின்றது.

மார்ச் 9, 2024 அன்று காலை 9.30 மணி முதல் காலை 11 மணி வரை நடைபெற்ற இம்மெய்நிகர் நிகழ்வானது, இலங்கை வாழ் பெண்களுக்கு அவர்களின் நல்வாழ்வைக் கவனித்துக்கொள்ளும் வகையினில் ஓர் மாற்றத்தினை ஏற்படுத்தியது.

Suwa Diviya என்பது நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். இது நீரிழிவு நோயினைத் தடுப்பது மற்றும் முகாமைத்துவம் செய்வதில் இது கவனம் செலுத்தியது.

"She Thrives" என்பது சாதாரண சுகாதார மன்றம் அல்ல இது ஒரு முன்னேற்றுவிக்கும் தளமாகும், இது பெண்களை அவர்களின் தனித்துவமான சுகாதார விடையங்கள் தொடர்பாக ஊக்குவிக்கவும், அதிகாரம் அளிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# Study UK மாணவர் விருதுகளின் வெற்றியாளர்கள் அறிவிப்பு



இலங்கையில் 2023-24 ஆம் ஆண்டுக்கான Study UK மாணவர் விருதுகளின் வெற்றியாளர்கள் கொழும்பில் பிரிட்டிஷ் கவுன்சில் நடத்திய விழாவில் அறிவிக்கப்பட்டனர்.

விழாவில் அரசு, தனியார் அமைப்புகளின் சிரேஷ்ட பிரதிநிதிகள் மற்றும் இங்கிலாந்து முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

விருதுக்காக நடுவர்கள் நான்கு பிரிவுகளின் கீழ் பெறுநர்களைத் தேர்ந்தெடுத்தனர். விஞ்ஞானம் மற்றும் நிலைத்தன்மை, கலாசாரம் மற்றும் படைப்பாற்றல், சமூக நடவடிக்கை, வணிகம் மற்றும் புத்தாக்கம் என்பனவே அவையாகும்.

விருது பெற்றவர்கள் வர்த்தக வல்லுநர்கள், தொழில்முனைவோர் மற்றும் சமூகத் தலைவர்கள் என அவர்களின் சிறந்த சாதனைகளுக் காகவும், இங்கிலாந் துக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு களை வலுப்படுத்து வதற்கான அவர்களின் பங்களிப்புக்காகவும் அங்கீகரிக்கப்பட்டனர்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ் தானிகர் அன்ட்ரூ பேட்ரிக் அவர்களினால் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

# HNB Financeயின் நிதி அறிவு திட்டங்கள்




இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB Finance PLC தனது நுண் மற்றும் சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களின் நிதி அறிவை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்திய "அபிவிருத்திக்கான நிதி கல்வியறிவு" திட்டத்தின் மற்றுமொரு கட்டத்தை குறிக்கும் வகையில் இந்த வருடத்தின் முதல் இரண்டு நிகழ்ச்சிகள் அண்மையில் அம்பலாந்தோட்டை மற்றும் திஸ்ஸமஹாராமவில் இடம்பெற்றன.

HNB Finance இன் நிறுவன சமூகப் பொறுப்புணர்வு அணுகுமுறையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் கடந்த சில வருடங்களாக தீவின் பல்வேறு மாகாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளின் மூலம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நுண் மற்றும் சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களின் நிதி அறிவை மேம்படுத்த முடிந்தது.

HNB FINANCEஇன் திறன் அபிவிருத்தித் துறைத் தலைவர் அனுர உடவத்த இந்தத் தொடரின் நிதிய கல்வியறிவு நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கினார்.

இங்கு, நுண் மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கு வணிகக் கணக்குகளை பராமரித்தல், கடன் நிர்வகிப்பு, இலாபத்தில் ஒரு பகுதியை மறு முதலீடு செய்தல், வணிகத்தின் செலவு நிர்வகிப்பு மற்றும் புதிய தொழில் வாய்ப்புகளைத் தேடுதல் ஆகிய அம்சங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டது.

HNB FINANCE இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்ற தொழில்முனைவோரிடமிருந்து மிகவும் ஆக்கப்பூர்வமான 10 யோசனைகளைத் தேர்ந்தெடுத்து அந்த யோசனைகளுக்கு பரிசுகளை வழங்கியது. இதுதவிர, இந்நிறுவனம் உருவாக்கிய "வளர்ச்சிக்கான நிதி அறிவு" கையேடு இங்கு வந்த அனைத்து தொழில்முனைவோருக்கும் வழங்கப்பட்டது.

# பியுரிஃபைங் நீம் ஃபேஸ் வோஷ் மீண்டும் அறிமுகம்



மூலிகை மற்றும் ஆயுர்வேத மூலப்பொருட்களின் வலுவான இருப்பைக் கொண்ட உடல்நலம் மற்றும் அழகு சாதனப் பொருட்களில் நிபுணத்துவம் பெற்ற உலகின் மிகப்பெரிய நுகர்வோர் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான ஹிமாலயா வெல்னஸ் நிறுவனம், இலங்கையில் ஹிமாலயா பியுரிஃபைங் நீம் ஃபேஸ் வோஷ் மீண்டும் அறிமுகப்படுத்துவதாக சமீபத்தில் அறிவித்துள்ளது.

50 வேம்பு மற்றும் மஞ்சள் கலவையின் செயற்திறன்மிக்க உட்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது அத்தோடு வலுவான உள்ளார்ந்த பாக்டீரியாவை எதிர்த்துப் போராடும் பண்புகளைக் கொண்டுள்ளது.

இது 99.9வீத பருக்களை உருவாக்கும் பாக்டீரியாவைக் அழித்து, பயன்படுத்திய முதல் நாளிலிருந்தே பருக்கள் வருவதை தடுத்திட உறுதியளிக்கிறது.

தயாரிப்பானது, ஏனைய சகல சந்தைகளிலும் நுகர்வோரால் விரும்பப்பட்டு ஒரு தனித்துவமான வெற்றியினை தனதாக்கியுள்ளது. அண்டைய நாடான இந்தியாவில் இது ஆரம்பிக்கப்பட்டது, இது இலங்கையைப் போன்ற வெப்பமான மற்றும் ஈரப்பதமான வானிலை நிலைமைகளைக் கொண்டுள்ளது.